தூய்மைக்கு ஒரு வடிவம்
எஸ்.ஏ.பி.



தந்தை
பற்றிய
இனிய
நினைவுகள்

டாக்டர் **எஸ்.எ.பி.ஜவஹர் பழனியப்பன்**

வணக்கம்

எதிர்ப் பக்கத்தில் நீங்கள் பார்க்கும் பாலசுப்ரமணியரின் புகைப்படம் என் தந்தைக்குச் சிறு வயதிலிருந்தே மிகவும் பிடித்தமானது. அடிக்கடி இந்த பாலசுப்ரமணியனை அவர் விரும்பி, வணங்கிக் கொண்டிருப்பார்.

"இந்தப் படம் மட்டும் உங்களை மிகவும் கவர்ந்ததன் காரணம் என்ன?" என்று ஒரு நாள் தந்தையிடம் கேட்டேன்.

அவர் புன்சிரிப்புடன் "நாமதான் கடவுளைக் கும்பிடணும். கடவுள் அருள் வழங்கற மாதிரி தான் எல்லாப் படமும் இருக்கும். ஆனால் இதில் பால சுப்ரமணியன், கும்பிடற நம்மை மதிச்சு தானும் பதில் வணக்கம் செலுத்தி, அன்போட பேசற மாதிரி ஒரு நெருக்கம் இருக்கு, அதனாலதான் இந்தப் படம் எனக்கு ரொம்ப புடிச்சிருக்கு'ன்னு சொன்னார்.

இந்தப் படத்தை இப்போது பார்க்கும்போது எனக்கு பாலசுப்பிர மணியனுக்குள் அப்பா தெரிகிறார்.



தூய்மைக்கு ஒரு வடிவம் எஸ்.ஏ.பி.

எஸ்.ஏ.பி. குமுதம் பத்திரிகையை நவம்பர் 1947ல் துவக்கினார். முதல் இதழ் 2000 பிரதிகள் விற்றது. அவர், அடுத்த 47 ஆண்டுகளுக்கு அதன் ஆசிரியராக இருந்து பத்திரிகைத் துறையில் பல வெற்றிகளைக் கண்டார். விற்பனையை ஆறு லட்சத்துக்கு மேல் கொண்டு சென்றார். 1994ம் ஆண்டு, ஏப்ரல் 17ம் தேதி அவர் மறைந்தார். சக மனிதர்களை நேசித்தவர். தனக் கென்று எந்த விளம்பரமும் தேடிக் கொள்ளாதவர். அவருடைய புகைப்படம் அவர் மறைந்த பின்புதான் குமுதம் இதழில் பிரசுரமாகியது. அவரைப் பற்றிய சுவாரஸ்யமான பல விவரங்களும் குணாதிசயங்களும் அவர் குடும்பத்திற்கும் நெருக்கமான நண்பர்களுக்கும் மட்டுமே தெரிந்தவை. அவைகளில் சில இதோ:

ஒன்று

அதிகாரி ஏன் அப்படிப் பார்க்கிறார்?

எஸ்.ஏ.பி அப்போதுதான் எம்.ஏ. முடித்து பி.எல். சட்டப் படிப்பும் பாஸ் செய்திருந்தார். அப்போது அந்தச் செலவு செய்ய அவரால் முடிந்தது. அவர் அத்தனை புத்தகங்களிலும் படித்து ஆசைப்பட்டு பல நாட்கள் திட்டமிட்டு வைத்திருந்த கனவு நனவாகவிருந்தது.

அந்தக் கனவு, ஒரு மாதத்தில் ஆறு ஐரோப்பிய நகரங்களைச் சுற்றிப் பார்ப்பது.

எல்லா விசாக்களும் வாங்கியாகிவிட்டது. இன்னும் ஒரே ஒரு விசாதான் பாக்கி. அதைப் பெறுவதற்காகக் கான்சல் அலுவலகத்துக்குச் சென்றிருந்தார். இரண்டு வாரத்தில் புறப்பட வேண்டியிருந்ததால் எல்லா ஏற்பாடுகளையும் முடித்துவிட விரும்பினார். விசா அலுவலகத்திலிருந்த வயதான அதிகாரி எஸ்.ஏ.பி.யின் விண்ணப்பத்தைப் பரிசீலித்தார். எல்லாம் இருந்தது. அவர் எஸ்.ஏ.பியை ஒரு மாதிரியாகப் பார்த்தார். எஸ்.ஏ.பிக்கு அப்போது 24 வயது. அவருக்கு அதிகாரி ஏன் அப்படிப் பார்க்கிறார் என்பது முதலில் விளங்கவில்லை. ஒரு மாதிரி ஏக்கமான சோகமான பார்வை அது. அல்லது பொறாமையா?

"எத்தனையோ பேர் வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்புகிறார்கள். எனக்கும் போக ஆசைதான். ஆனால் என்னிடம் அத்தனை பணம் இல்லை. ஆனால் நீ? இத்தனை இளவயதில் உன்னால் செல்ல முடிகிறது. இந்தா உன் விசா. சென்று வாரும்."

எஸ்.ஏ.பி. வீட்டுக்கு வந்ததும் சற்றுப் படபடப்பாக இருந்தார். அவருக்கு அந்த தினத்தின் சம்பவங்கள் ஒரு சங்கடமான வினோதமான உணர்ச்சியை ஏற்படுத்தின.

ஒரு சக மனிதனின் பொறாமைக்கு உள்ளாகிவிட்டோம். அந்த இள வயதில்கூட எப் போதும் வெள்ளைக் கதராடையும் உடுத்திக் கையில் வாட்சுகூட கட்டுவதில்லை. இருந்தும் மற்றொரு மனிதனின் பொறாமைக்குள்ளாகிவிட்டோம் என்ற எண்ணம் அவருக்கு ஏற்கவில்லை. மறுதினம் தீர்மானித்து விட்டார். தன் பயணத்தை ரத்து செய்துவிட்டார். யாராலும் அவருடைய முடிவை மாற்ற முடியவில்லை. இந்தச் சம்பவம் எனக்கு நிச்சயமாகத் தெரியும். அதன் பின் எஸ்.ஏ.பி. இந்திய மண்ணை விட்டு வெளிநாடு சென்றது தன் 62ம் வயதில்தான். அமெரிக்காவில் என்னைப் பார்க்க வந்தார். ■

இரண்டு

காணாமல் போன குடை!

1992ம் ஆண்டு செப்டம்பர் மாதம் எடிட்டர் எஸ்.ஏ.பி. லண்டன் மாநகரின் அழகை ரசித்துக் கொண்டிருந்தார். 'ஹைட் பார்க்'கினூடே அவர் தினம் நடந்து செல்லும் போது இத்தனை பச்சையான அழகான புல்வெளிகள்கூட இருக்குமா என்று வியப்பார். வாழ்க்கையின் எளிமையான பல விஷயங்கள் அவருக்கு அதிக இன்பம் அளித்தன.

எடிட்டர் எஸ்.ஏ.பி. புத்தகங்கள் படிப்பதை மிகவும் விரும்பி ரசிப்பவர் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இங்கிலாந்து வந்த மறுதினம் அவர் ஃபாயில்ஸ் ('Foyles') செல்ல விரும்பியதில் ஆச்சரியமில்லை. ஃபாயில்ஸ் என்பது உலகின் மிகப் பெரிய புத்தகக் கடை. ஆறு மாடிகள், கிடைத்த இடத்திலெல்லாம் அடைத்துவைக்கப்பட்ட புத்தகங்கள். ஒழுங்காக ஷெல்ஃபுகளில் வைக்க இடமின்றி பல புத்தகங்கள் தரையில் இருக்கும். அந்தக் காட்சி கொஞ்சம் கொஞ்சம் கொத்தவால் சாவடியை ஞாபகப்படுத்தும். காய்கறிக்குப் பதில் புத்தகங்கள்.

பாதி நாள் புத்தகங்கள் படிப்பதிலும் வாங்குவதிலும் செலவழித்த நாங்கள் மூவரும் - என் தந்தையார் எஸ்.ஏ.பி., என் தாயார், நான் - லண்டனில் மற்ற இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு டாக்ஸி பிடித்து எங்கள் ஃப்ளாட்டுக்குத் திரும்பி வந்தோம்.

டாக்ஸியை விட்டு இறங்கும் தருணத்தில் என் தாய் "எங்கே குடை? காணவில்லையே?" என்றார். என் தந்தையார்தான் குடையை வைத்திருந்தார். நாள் முழுதும் அவர் கையில்தான் இருந்தது. கொஞ்சம் சங்கடமாக எங்களைப் பார்த்து "வந்து... எங்கே தொலைத்தேன்?... ஓ... இப்போது நினைவுக்கு வருகிறது. ஃபாயில்ஸ் புத்தகக் கடை ஐந்தாவது மாடி லிஃப்ட் அருகில் ஒரு நாற்காலியில் வைத்து மறந்து வந்துவிட்டேன். திரும்பச் சென்று அதை எடுத்து வந்துவிடலாம்" என்றார்.

வேகமாக மனக் கணக்கு போட்டுப் பார்த்ததில் திரும்பப் போய் வர டாக்ஸிக்கு 4 பவுண்டாவது ஆகும் (இருநூறு ரூபாய்). மேலும் குடை அங்குதான் இருக்கிறது என்பது என்ன நிச்சயம்? ஆனால் என் தந்தையார் பிடிவாதமாக திரும்பப் போக வேண்டும்; அந்தக் குடைதான் வேண்டும் என்றார்.

நான் சம்மதிக்க வேண்டியிருந்தது. திரும்பப் புத்தகக் கடைக்குச் சென்றபோது அமைதியாக இருந்தது.

என் தந்தையார் சொன்ன இடத்தில் அந்த நாற்காலி இருந்தது. குடை இல்லை. அப்போது இன்முகத்துடன் ஓர் ஆங்கிலேயர் வந்து "கொஞ்சம் இருங்கள், சற்று நேரத்திற்கு முன் ஒருவர் ஒரு குடையை என் ஆஃபிஸில் கொண்டு வந்து கொடுத்தார். என்னோடு வாருங்கள்" என்றார்.

அவருடைய அலுவலக அறைக்குச் சென்றபோது



அமெரிக்காவில் ஓஹையோ மாநிலத்தில் (1993) எஸ்.ஏ.பி. தன் துணைவியாருடன்

அங்கே குடை பத்திரமாக இருந்தது. அதைப் பார்த்ததும் என் தந்தை முகம் பிரகாசமாகி மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

வீடு திரும்பும்போது டாக்ஸியில் 'நீங்கள் ரொம்ப அதிர்ஷ்டக்காரர். உங்கள் குடையை யாரும் திருடவில்லை. எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது' என்றேன்.

எஸ்.ஏ.பி. "அப்படி இல்லை" என்றார்.

"இது அதிர்ஷ்டத்தினால் அல்ல. எதற்காக நாம் கெட்டதையே நினைக்க வேண்டும்? எதற்காகத் திருடு போகும் என்று எண்ண வேண்டும்? நம்மைச் சுற்றியுள்ளவர்கள் நல்லவர்கள், யோக்கியமானவர்கள் என்று நாம் உண்மையாக எண்ணினால் அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். அவர்கள் கெட்டவர்கள், ஏமாற்றுக்காரர்கள் என்று நாமே எண்ணினால் அவர்கள் கெட்டவர்களாக இருப்பார்கள். நம் எண்ணங்கள் அவ்வளவு சக்தி வாய்ந்தவை. அதனால்தான் எப்போதும் நாம் நல்லதையே நினைக்க வேண்டும்."

ஆம். அது எனக்கு அருமையான ஒரு பாடமாக இருந்தது. இப்போதும் அதை நினைவில் வைத்துக் கொள்கிறேன். இந்தப் பாடத்தின் விலை நாலு பவுண்ட். டாக்ஸிக்குக் கொடுத்தது. ■

மூன்று

அப்பாவின் 'வுல்ஸ்லி'

வருடம் 1943. எஸ்.ஏ.பிக்கு அப்போது 19 வயது. அவர் வீட்டு போர்டிக்கோவில் நின்று கொண்டு இருந்த அந்தக் கரிய பளபளப்பான இங்கிலாந்து தேசத்து வஸ்து அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. அது ஒரு பெரிய கார். 'வுல்ஸ்லி' மாடல். அதன் நம்பர் MSP 4021. சென்னையில் அதுபோல் ஒன்று இரண்டு கார்கள்தான் இருந்தன.


அந்தக் கார் எஸ்.ஏ.பி.யின் டிரைவர் கதிர்வேலுக்கும் மிகவும் பிடித்திருந்தது. மென்மையான நெஞ்சம் கொண்ட கொஞ்சம் திடகாத்திரமான ஆசாமி. ஒவ்வொரு காலையிலும் அதைத் தூசி தட்டி, அலம்பி, பாலீஷ் போட்டு வைத்திருப்பார்.

பல நாட்களாக அவர் எஸ்.ஏ.பி.யின் குடும்பத்தில் வேலை செய்தவர். கோச் வண்டி ஓட்டிக் கொண்டு இருந்தவர். பதவி உயர்வு பெற்று கார் டிரைவர் ஆனவர்.

எஸ்.ஏ.பி.யின் அந்தக் காலகட்ட அந்தஸ்தைப் பற்றி கொஞ்சம் விளக்க வேண்டும். மூன்று வயதாக இருக்கும்போது அவரது தந்தை இறந்துவிட்டார். தாய், ஒரே மகனாதலால், மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்து விட்டார். அவர் கேட்டதையெல்லாம் கொடுக்க விரும்பினார். எஸ்.ஏ.பி. செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். எனவே நிறைய சொத்தும் வம்சவழியில் பெற்றவர். புரசைவாக்கத்தில் பிரமாண்டமான பங்களாவில் தாயுடன் வேலைக்காரர்கள் புடைசூழ சௌகரியமாக வாழ்ந்தவர். தந்தையும் இல்லை. தந்தை ஸ்தானத்தில் அவருக்கு வழி காட்டவும் யாரும் இல்லை. அவருடைய கிட்டத்து உறவினர்கள் அவரைப் பார்த்துக் கொண்டாலும், அவர்களும் பணக்காரர்கள். சீட்டாட்டம், குதிரைப் பந்தயம் இவைகளுக்கே அவர்களுக்கு நேரம் போதவில்லை. எஸ்.ஏ.பி.யை யாரும் கவனிக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. இளம் எஸ்.ஏ.பி. தன்னைச் சுற்றியுள்ள அந்த நபர்களின் சமூக அந்தஸ்திலோ விளையாட்டுக்களிலோ கலந்து கொள்ளவில்லை. மாறாக மிகமிக தனி மனிதனாக ஆகிவிட்டார். தமிழ் ஆங்கில இலக்கியப் புத்தகங்கள் படிப்பதிலும், பக்தியிலும் கோயில்களிலும் நாட்களைக் கழித்தார். பள்ளிப் படிப்புகளுக்குப்பின், லயோலா கல்லூரியில் பி.ஏ., எம்.ஏ., படித்தார். ஒழுங்காகப் பிரார்த்தனையும் தியானமும் செய்தார். மிகச்சில நல்ல நண்பர்களுடன் மட்டுமே பழகினார். அவர்கள் அனைவரும் அவருடைய ஆன்மீக நம்பிக்கைகளிலும் பழக்கங்களிலும் பங்கு கொண்டவர்கள்.

எஸ்.ஏ.பி.யின் எண்ணங்கள் நேர்மையாக இருந்தன. தன்னம்பிக்கையும் இருந்தது. அப்போது ஒரு சம்பவம் அவருடைய வாழ்வைக் கலக்கி அமைதி குலையச் செய்தது. ஒரு நாள் அவருடைய அத்தையின் கணவர் இராமசாமி செட்டியார் வந்தார்.



கறுப்பு நிற 'வுல்ஸ்லி' காரில் எஸ்.ஏ.பி. (1943)

எஸ்.ஏ.பிக்கு அவர்மேல் மிகவும் மரியாதை.

"மாப்ளே! உங்களுடன் ஒரு விஷயம் பற்றிப் பேசவேண்டும்" என்றார் செட்டியார்.

"சொல்லுங்கள் மாமா" என்றார் எஸ்.ஏ.பி.

"இது கொஞ்சம் நாசுக்கான விஷயம். என்னைத் தப்பா நினைச்சுக்காதீங்க. உங்ககிட்ட சில நாளா இதைப் பத்திப் பேசத் தயங்கிக்கிட்டே இருந்தேன். இப்பப் பேச வேண்டியதாயிடுச்சு."

எஸ்.ஏ.பி.யின் இதயம் சில துடிப்புக்களைத் தவறவிட்டு விட்டது.

மாமா இந்த மாதிரி பீடிகை போடுகிறார் என்றால் ஏதோ சீரியஸாகத்தான் இருக்க வேண்டும். இது வரை மாமா இதுமாதிரி அவரிடம் மென்று முழுங்கியது இல்லை. அவரிடம்

இராமசாமி செட்டியார் தொடர்ந்து "நம்ம சாதி சனங்ககிட்ட உங்களைப் பத்தி ஒரு பேச்சு அடிபடுது."

எஸ்.ஏ.பிக்குக் குழப்பமாக இருந்தது. முகம் சற்று வெளிறிப் போய், "என்ன பேச்சு?" என்றார்.

"உங்க வுல்ஸ்லி காரைப் போன வாரம் ராத்திரி முழுக்கக் கோடம்பாக்கத்துல ஒரு வீடு முன்னால பார்க் பண்ணியிருப்பதைப் பார்த்தாங்களாம். அந்த வீடு

ஒரு வேசியின் வீடு. நீங்க வந்து மேம்போக்கா ஆன்மீகமாகவும் ஒழுங்காகவும் இருப்பதாகவும், இந்த பலவீனங்கள் உங்களுக்கு எப்போதும் உண்டு என்றும் பேசிக் கொள்கிறார்கள். உங்க பேரும் மரியாதையும் உங்களுக்கு முக்கியம்னு எனக்குத் தெரியும். கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க. இந்த மாதிரி வதந்தி களை இனிமேல் வரவிடாமப் பாத்துக்குங்க."

எஸ்.ஏ.பி. பிரமித்துப் போய் நின்றார். தன் காதுகளை அவரால் நம்ப முடியவில்லை. என்ன நடந்திருக்க முடியும் என்பதை அவரால் யூகிக்க முடியும்.

உடனே டிரைவர் கதிர்வேலுவைக் கூப்பிட, அவர் பயந்து கொண்டே உள்ளேவர, "கதிர்வேலு! போனவாரம் என்னுடைய காரை ராத்திரி முழுக்க எங்கே எடுத்திட்டுப் போயிருந்தே? சொல்லு உடனே. கோடம்பாக்கத்துல ஒரு வீட்டுக்கா?"

கதிர்வேலு மிகவும் வெட்கத்துடன் தலைகுனிந்தார்.

"ஆமாய்யா. நீங்கதான் சொன்னீங்க. நம்ப உறவுக்காரர் வீரப்பன்* வெளியூர்ல இருந்து மெட்ராஸ் வந்தப்ப நம்ம வுல்ஸ்லி காரை ஒரு நாளைக்குப் பயன்படுத்திக்கலாம்னு நீங்கதான் சொன்னீங்க. நாள் முழுக்கக் காரைப் பயன்படுத்திக்கிட்டு ராத்திரி அந்த வீட்டுக்கு அழைச்சிட்டுப் போகச் சொன்னாங்க. நான் என்ன செய்வேன்? அவர் சொன்ன படி செய்ய வேண்டியதாயிற்று. என்னை மன்னிச்சிடுங்க."

எஸ்.ஏ.பி. மிக மௌனமானார். எதுவும் பேசவில்லை. தன்னுடைய அறைக்குச் சென்று, தன் தாயுடனோ ராமசாமிச் செட்டியாரிடமோ பேசவே இல்லை. அவர்கள் எஸ்.ஏ.பி., வீரப்பனை டெலிபோனில் கூப்பிட்டு திட்டித் தீர்த்துவிடுவார், அல்லது ஏதாவது செய்வார் என்று எதிர்பார்த்தார்கள். எஸ்.ஏ.பி. எதுவுமே செய்யவில்லை.

சிந்தனை வயப்பட்டு மௌனமாகவே இருந்தார். ஒரு வாரம் கழித்து இராமசாமி செட்டியார், எஸ்.ஏ.பி.யிடம், "மாப்ளே, நீங்க வீரப்பனைக் கூப்பிட்டு அவர் செஞ்ச கெட்ட காரியத்துக்குத் திட்டுவீங்கன்னு நெனச்சேன். உங்க பேரு கெடாம இருக்குறது உங்களுக்கு முக்கியமில்லையா? ஏன் நீங்க எதுவுமே செய்யல?"

எஸ்.ஏ.பி., "நான் எப்படி அவரைத் திட்ட முடியும்? தப்பு செய்தது நான்தானே. ஒரு தப்பான ஆசாமிகிட்ட நம்பிக்கையும் நட்பும் வெச்சிருந்ததனால எனக்குக் கிடைத்த தண்டனை அது. நம்முடைய நம்பிக்கையையோ, நட்பையோ ஒருத்தர்கிட்ட ஒப்படைக்கிறதுக்கு முன்னாடி ரொம்ப யோசிக்கணும். காரணம், கொடுத்த பிறகு அதைத் திருப்பிப் பெற முடியாது. இது ஒரு நல்ல உதாரணம். என்னுடைய காரை வீரப்பன்கிட்ட கொடுக்கிறதுக்கு முன்னாடி விளைவுகளை யோசிச்சிருக்கணும். என்மேலதான் தப்பு. வீரப்பன் மேல இல்லை."

எஸ்.ஏ.பி., அதன்பின் வீரப்பனைப் பற்றிப் பேசவே இல்லை. இந்த சமாசாரத்தைப் பற்றியும் வேறு யாரிடமும் விவாதிக்கவில்லை. அந்த 'வுல்ஸ்லி' காரை இன்னும் சில வருஷங்களுக்கு வைத்திருந்துவிட்டு, 1947 இல் விற்றார்.

1994 இல் அவர் இறக்கும் வரை இந்தியக் கார்களையே வாங்கினார். ■

---

* பெயர் மாற்றப்பட்டுள்ளது

நான்கு

அம்மாவிற்குச் சொன்ன கதை!

வாழ்க்கையைப் பற்றி, உலகத்தைப் பற்றியெல்லாம், வாலிப வயதில் உள்ள பையன்களிடம் அம்மாக்கள் உபதேசம் பண்ணுவது வழக்கம்தான். அப்படி யெல்லாம் பண்ணினால்தான் அம்மா. வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் தனது மகன், நல்லபடியாகவும், பத்திரமாகவும் வாழ வேண்டுமே என்ற அக்கறையில்தான் அவர்கள் அட்வைஸ் செய்கிறார்கள்.

எஸ்.ஏ.பி.யின் அம்மாவும் அப்படித்தான். எஸ்.ஏ.பி.க்கு மூன்று வயதிருக் கும்போதே அவரது தந்தை மறைந்துவிட்டார், அம்மாவின் அரவணைப்பில்தான் அவர் வளர்ந்தார். அவர் அம்மாவின் பெயர் லட்சுமி ஆச்சி. அழகாக, கம்பீரமாக இருப்பார். எஸ்.ஏ.பி. மீது உயிரையே வைத்திருந்தார். எஸ்.ஏ.பிக்கு ஒரு தம்பி பிறந்து ஒரு வயதிலேயே இறந்து விட்டார். எஸ்.ஏ.பி. பிறந்தது 1924ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் தேதி, 1927ம் ஆண்டு வாக்கில், அவரது தந்தை, தம்பி இருவருமே மறைந்துவிட்டார்கள்.

லட்சுமி ஆச்சியைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் அவரது அன்பும் தாராள மனதும்தான் முதலில் நினைவுக்கு வருகின்றன. எத்தனையோ பேர் உதவி கேட்டு வருவார்கள். அவர் இல்லையென்று சொன்னதில்லை. எல்லோரிடமும் அவர் ஆழ்ந்த அன்பும் அக்கறையும் காட்டினார். ஆனால் எஸ்.ஏ.பி. மீது உயிரையே வைத்திருந்தார்.

அப்போது எஸ்.ஏ.பி.க்கு பதினேழு வயதிருக்கும். சென்னை லயோலா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். அவர் நல்ல, உழைத்துப் படிக்கும் மாணவர், புத்தகப் பிரியர். படிப்பதில் மிகுந்த விருப்பம், அவர் புத்தகம் படிப்பதே ஒரு தனி பாணி. எந்த விஷயத்தைப் பற்றிப் படிக்க விரும்புகிறாரோ அதைப் பற்றி எழுதப்பட்டுள்ள பல புத்தகங்களைப் படித்து விடுவார். பின் ஒரே விஷயத்தை வெவ்வேறு ஆசிரியர்கள் எப்படி எப்படி எழுதியிருக்கிறார்கள் என்று அலசிப் பார்ப்பார். அதற்குப் பின் ஆசிரியர்களைப் பற்றி ஒப்பீடு, ஆராய்ச்சி.

இதன் காரணமாக, கல்லூரி முடிந்த பிறகு, லைப்ரரியில் நீண்ட நேரம் செலவிடுவார். பெரும்பாலும் வீடு திரும்பும்போது இருட்டிப் போய்விடும்.

அவர் வீட்டிற்கு வர லேட்டானால், அவரது அம்மாவிற்குக் கவலை வந்துவிடும். ‘சூரியன் மறைஞ்சு ரொம்ப நேரமாச்சு, இன்னும் பைய னைக் காணுமே’, என்று கவலைப்பட ஆரம் பித்து விடுவார். நேரம் கூடக்கூட அவரது கவலையும் அதிகரிக்கத் துவங்கிவிடும். தெரு வைப் பார்த்து அமைந்திருக்கும் ஜன்ன லோரமாக அமர்ந்து தவம் கிடக்க ஆரம்பித்து விடுவார். எஸ்.ஏ.பி. வீடு திரும்பியதும், ‘அப்பா, வந்தியா, என்ன ஆச்சோ, ஏது ஆச்சோனு

பயந்திட்டேன், ஏதாச்சும் விபத்தில மாட்டிக்கிட்டியோனு கலங்கிப் போயிட்டேன்' என்பார்.

இளம் வயதிலேயே எஸ்.ஏ.பி. அமைதியானவராகத்தான் இருந்தார். இயல்பாகவே கூச்ச சுபாவம் கொண்டவர். அம்மாவிடம் பேசக்கூடத் தயக்கம். அதனால் எதிர்த்து வாயாட மாட்டார். "லைப்ரரியில் படித்துக் கொண்டிருந்தேன்" என்று மட்டும் சொல்லுவார்.

இது போல இரண்டு மூன்று முறை நடந்தது.

ஒரு நாள் வழக்கத்தை விடவும் லேட்டாகிவிட்டது. வரும் வழியிலெல்லாம், அம்மா இன்று என்ன சொல்லப்போகிறார்கள் என்பதை எண்ணியபடியே வீடு திரும்பினார் எஸ்.ஏ.பி.

அவர் வீட்டிற்குள் நுழைந்ததும், "வா, இரண்டு மணி நேரமா வாசலையே பாத்துக்கிட்டிருக்கேன். உனக்குப் பயங்கரமா என்னவோ ஆயிடுச்சுனு மனசு கிடந்து அடிச்சுக்கிட்டே இருந்துச்சு. வந்திட்டியா! உடம்புக்கு ஒண்ணும் இல்லியேப்பா!" என்றார் லட்சுமி ஆச்சி.

எஸ்.ஏ.பி. அம்மாவைக் கனிவோடு பார்த்தார். பிறகு, "ஆத்தா, இன்னிக்கு ஒரு கதை படிச்சேன். சொல்றேன் கேக்குறீங்களா?" என்றார்.

லட்சுமி ஆச்சிக்கு ஒரே ஆச்சரியம். தன் மகன் தனக்கு என்ன கதை சொல்லப்போகிறான்?

"சரிப்பா."

"ஆத்தா, வீர சிவாஜியின் கதையை உனக்குச் சொல்லப் போறேன்" என்று ஆரம்பித்தார் எஸ்.ஏ.பி., "இந்தியாவின் வீரர்களிலேயே மிகப் பெரிய வீரர். அவர் கதையைப் படிச்சிட்டிருந்தேன். அவர் என்ன சொல்றார் தெரியுமா? தன்னை இப்படிப்பட்ட தைரியமான இளைஞனாக, வீரனாக ஆக்கிய பெருமை ஒரே ஒருவரைத்தான் சாரும் என்கிறார்."

"யார் அந்த ஒருவர்?" என்று கேட்டார் லட்சுமி ஆச்சி.

"அவரது அம்மா!"

"தன்னை வீரனாக ஆக்கியவர் தன்னுடைய அம்மா, ஜிஜி பாய் என்கிறார் சிவாஜி. சின்ன வயதிலேயே ஜிஜி பாய் திடமாவும் தைரியமாவும் இருப்பாங்களாம். அவங்களே தைரியமானவங்களா இருந்ததினாலே சிவாஜியையும் தைரியமானவரா வளர்த்தாங்களாம். எதைக் கண்டும் பயப்படக்கூடாது, எது சரியோ அதைச் செய்யணும்னு சொல்லிச் சொல்லி வளர்த்தாங்களாம். அதனாலதான் சிவாஜி, அப்படிப்பட்ட வீரனா வந்தார்."

மனதில் எழுச்சி பொங்க, லட்சுமி ஆச்சி, "அப்படியா!" என்றார்.

எஸ்.ஏ.பி. கதையை முடித்துவிடவில்லை. ஒரு சின்ன இடைவெளி விட்டுத் தொடர்ந்தார்.

"ஆத்தா, நீங்க ஜிஜி பாய் போல இருக்கணும். திடமா, தைரியமா. அப்பத்தான் நான் சிவாஜியைப் போல இருக்க முடியும்."

லட்சுமி ஆச்சி நெகிழ்ந்து போனார். ஒன்றும் பதில் சொல்லவில்லை. முன் போலவே எஸ்.ஏ.பியை உயிராக நேசித்து வந்தார். ஆனால் முன்னைவிட அவரைப் புரிந்து கொண்டு விட்டார் என்றுதான் சொல்லவேண்டும்.

அம்மாக்கள் குழந்தைகளுக்குக் கதை சொல்வது வழக்கம். ஆனால் எப்போதாவது, பிள்ளைகள் அம்மாக்களுக்குக் கதை சொல்வதும் உண்டு.



ஆசிரியர் எஸ்.ஏ.பி.யின் தாயார் லட்சுமி ஆச்சி

ஐந்து

அந்தத் தீர்மானம்!

மழை விடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. மஞ்சனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

அவர் வங்கிக்குச் சென்றாக வேண்டும். எஸ்.ஏ.பி. பணம் எடுத்து வரச் சொல்லியிருந்தார்.

அது 1947ம் வருடம், அக்டோபர் மாதம். சென்னையைப் புயலும், மழையும், சூறைக்காற்றும் உலுக்கிக் கொண்டிருந்தன. புரசைவாக்கத்தில் இருந்த அந்தப் பெரிய பங்களாவைச் சுற்றிலும் மழைத் தண்ணீர் தேங்கியிருந்தது. பங்களாவின் பெரிய பெரிய மரக்கதவுகள் காற்றில் பெரும் சத்தத்துடன் அடித்துக் கொண்டன. மஞ்சனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. வெளியே கடும் மழை பயமுறுத்தியது. நிற்கிறாற்போல் தெரியவில்லை. வங்கிக்கு எப்படியும் சென்று விடுவது என்று தீர்மானித்து முழங்காலளவு தண்ணீரில் நடந்தபடி வெளியேறிச் சென்றார் மஞ்சன்.

பங்களாவைச் சுற்றிலும் சிறிய ஏரிபோல் தண்ணீர் தேங்கி இருந்தது. அதைப் பார்த்ததும் அவருக்கு எஸ்.ஏ.பி.யைப் பற்றிய பழைய ஞாபகம் மலர்ந்தது. எஸ்.ஏ.பி. சிறு பையனாக இருந்த போது மழைத் தண்ணீரில் காகிதக் கப்பல்கள் விட்டு அதையே மௌனமாகப் பார்த்தபடி நின்று கொண்டிருக்கும் காட்சி மஞ்சனின் நினைவில் ஓடியது.

எஸ்.ஏ.பி.யைப் பற்றிய பல இனிமையான நினைவுகள் மஞ்சனுக்கு உண்டு. எஸ்.ஏ.பி. சிறு வயது முதலே மிக அமைதியானவர். கொஞ்சம் கூச்ச சுபாவம் கொண்டவர். படிப்பதும் எழுதுவதும் அவருக்கு மிகவும் பிடித்த விஷயம். நிறைய சிந்தனை செய்வார். சிறிய வயதில் கூட, அடுத்தவர் மனம் புண்பட்டால் அவரால் தாங்கிக் கொள்ளமுடியாது.

அப்போது எஸ்.ஏ.பி.க்கு 23 வயது. என்றாலும் மஞ்சனுக்கு அவர் குழந்தைதான். எஸ்.ஏ.பி.யின் தந்தையார் இறந்தபோது எஸ்.ஏ.பி.க்கு வயது மூன்று. அச்சிறுவனை அன்போடும், பாதுகாப்போடும் வளர்ப்பது தன் கடமை என்று அப்போது உணர்ந்தார் மஞ்சன். எஸ்.ஏ.பி.யின் தந்தையாரிடம் விசுவாசமுள்ள வேலைக்காரராகப் பணிபுரிந்த அவருக்கு எஸ்.ஏ.பி.தான் உலகமாகயிருந்தார். அவரும் டிரைவர் கதிர்வேலுவும் எஸ்.ஏ.பி.யை காரில் பள்ளிக்கு அழைத்துச் செல்வார்கள். மாலை வீட்டிற்குக் கூட்டி வருவார்கள். எஸ்.ஏ.பி.யின் உடைகளைத் துவைத்து இஸ்திரி போடுவார் மஞ்சன். உடல்நலக் குறைவு ஏற்பட்டால் படுக்கை

அருகிலேயே உட்கார்ந்து கவனித்துக் கொள்வார். உணவு அளிப்பார். எஸ்.ஏ.பி. தூங்கும்வரை படுக்கை அருகிலேயே தரையில் அமர்ந்திருப்பார்.

“எங்கே மஞ்சண்ணன்? காலையிலிருந்த நான் அவரைப் பார்க்கவே இல்லையே?” தன் தாயார் லட்சுமி ஆச்சியிடம் கேட்டார் எஸ்.ஏ.பி.

மஞ்சனை வெறும் வேலைக்காரராக என்றுமே நினைத்ததில்லை எஸ்.ஏ.பி. ஒரு அண்ணனைப் போல்தான் எண்ணினார். ‘நீங்க, வாங்க’ என்றுதான் எவரையும் அழைப்பார்.


“வங்கிக்குச் சென்றிருக்கிறார். நீ வந்து சாப்பிடு. எப்போதும் எழுதிக் கொண்டும் படித்துக் கொண்டும் இருப்பதால் ரொம்ப பலவீனமாக இருக்கிறாய்.”

“எனக்குப் பசியில்லை. அப்புறம் சாப்பிடுகிறேன். பாவம் மஞ்சண்ணன், இந்த மழையில் எதற்காக வங்கிக்குச் செல்ல வேண்டும்? அவருக்கு வயதாகிக் கொண்டு வருகிறது. மழையில் நனைவது நல்லதில்லையே...” எஸ்.ஏ.பிக்கு இருப்பு கொள்ளவில்லை.

வீட்டுச் செலவுக்குத் தேவையான பணத்தை மஞ்சன்தான் வங்கியிலிருந்து எப்போதும் எடுத்து வருவார்.


எஸ்.ஏ.பி. அப்போது சட்டப் படிப்பு முடித்துவிட்டு, சென்னையின் பிரபல வக்கீல் ஒருவரிடம் ஜூனியராக இருந்தார். ஆனால் அந்தத் தொழில் அவருக்குப் பிடிக்கவில்லை. கோர்ட் விவாதங்களில் பொழுதைக் கழிக்க அவர் விரும்பவில்லை. ஆனால் வேறு என்ன செய்ய வேண்டும் என்கிற தீர்மானமற்ற நிலையில் அவர் இருந்தார். பரம்பரைச் சொத்து காரணமாக வசதியான பொருளாதார சூழ்நிலை, மிக எளிமையான வாழ்க்கை முறை. எனவே பிரசினை இல்லை.

படிப்பது, எழுதுவது என்று தன் இலக்கிய தாகத்தைத் தணித்துக் கொண்டு இருந்தார் அவர். சீஸர், சர்ச்சில், காந்தி, நேரு போன்றவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பது அவருக்கு ரொம்பப் பிடித்தமான விஷயம்.



குமுதம் முதல் இதழின் முகப்பு





எஸ்.ஏ.பி.க்குப்
புத்தகங்கள்
படிப்பதில் இருக்கும்
பிரியம் மகனுக்குப்
பாடம் சொல்லிக்
கொடுப்பதிலும்
இருந்தது.

"வங்கியிலிருந்து ஐநூறு ரூபாய் பணம் எடுத்து உங்கள் தாயாரிடம் கொடுத்து விட்டேன்" என்ற மஞ்சனின் குரல் கேட்டு புத்தகத்திலிருந்து நிமிர்ந்து பார்த்தார் எஸ்.ஏ.பி.

"வெளியே பலத்த காற்று, மழை. வரக் கொஞ்சம் தாமதமாகிவிட்டது. வழியெல்லாம் ஆறு மாதிரி தண்ணீர். நடப்பதற்கே சிரமமாக இருந்தது" என்ற மஞ்சனின் முகத்தில் வழக்கமான சந்தோஷமும் உற்சாகமும் இல்லாததை உடனே கவனித்து விட்டார் எஸ்.ஏ.பி.

"மஞ்சண்ணன்! ஏன் உங்கள் முகம் என்னவோ போல் இருக்கிறது? என்ன நடந்தது?"

"ஒன்றுமில்லை. அந்த பாங்க் மானேஜர்... அது ஒன்றும் பெரிய விஷயமில்லை" என்றார் மஞ்சன்.

"பரவாயில்லை. என்ன நடந்ததென்று சொல்லுங்கள்."

மஞ்சன் தயங்கியபடி சொன்னார். "அந்த வங்கி மானேஜருக்கு இன்று 'மூடு' சரியில்லை போலிருக்கிறது. 'எப்போதும் பணம் எடுக்க மட்டும் வருகிறீர்கள். மற்றவர்கள் எல்லோரும் பணம் போடும் போது உங்கள் செட்டியார் மட்டும் பணத்தை எடுத்துக் கொண்டே இருக்கிறாரே? பணம் சம்பாதிப்பது எப்படி என்று அவருக்கு தெரியாதா?' என்றார்.

எஸ்.ஏ.பி.க்கு 'சுரீர்' என்றது.

வங்கி மானேஜர் சொன்ன வார்த்தைகள் அவர் மனத்தை மிகவும் பாதித்தது. ஆனால் அமைதியாக அந்த விமர்சனத்தை ஏற்றுக் கொண்டார்.

"விடுங்கள். அந்த மானேஜர் சொன்னதைப் பொருட்படுத்த வேண்டாம்" மஞ்சன் எஸ்.ஏ.பி.யை ஆறுதல் படுத்த முயன்றார்.

மஞ்சன் மனமும் வருத்தமடைந்திருப்பது எஸ்.ஏ.பிக்குப் புரிந்தது. அவர் சிந்தனை வயப்பட்டார்.

ஒருவாரம் பொறுத்து தன் மனைவியிடம் சொன்னார் எஸ்.ஏ.பி: "பாவம். என் பொருட்டு வங்கி மானேஜரிடம் இப்படிப் பேச்சு வாங்கிக் கொண்டார் மஞ்சண்ணன். ஆனால் சட்டத் தொழில் செய்ய நான் விரும்பவில்லை. எழுதுவதும், படிப்பதும் போல் சந்தோஷம் தரக் கூடியது எதுவுமே எனக்கு இல்லை."

அன்று மாலை எஸ்.ஏ.பி. ஒரு முடிவுக்கு வந்தவரைப் போல் காணப்பட்டார். தன் மனைவியிடம் "நான் ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டேன்" என்றார்.

மனைவி ஆச்சர்யமாக "என்ன தீர்மானம்?"

"என் நண்பர் பார்த்தசாரதியிடம் நான் பேசினேன். நாங்கள் இருவரும் சேர்ந்து ஒரு புதிய தொழில் தொடங்கப் போகிறோம்."

1947, நவம்பர் மாதம், குமுதத்தின் முதல் இதழ் வெளிவந்தது. ■

ஆறு

எங்கே அந்தப் படம்?

இந்தியன் வங்கியின் புரசைவாக்கம் கிளை ஏற்பாடு செய்திருந்த அந்த விழாவில் உற்சாகம் ததும்பிக் கொண்டிருந்தது. அவர்கள் 19, ஹண்டர்ஸ் சாலை (இப்போது ஸ்ரீ நாராயண குரு சாலை) என்ற முகவரிக்குத் தங்கள் கிளையை இடம் மாற்றியிருந்தார்கள். அங்கிருந்த கட்டிடம், 1903ல் கட்டப்பட்டது. அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு, நவீன தோற்றத்துடன் புதுப்பொலிவுடன் காணப்பட்டது. அங்கே குடியேறியிருந்த புரசைவாக்கம் கிளையைத் திறந்து வைக்கத்தான் விழா.

சுமார் நானூறு பேர் வந்திருந்தார்கள். தோட்டத்தில் ஒரு பெரிய துணிப்பந்தல் (ஷாமியானா). அதில் வரிசை வரிசையாய் நாற்காலிகள். சூட் அணிந்த வங்கியின் உயர் அதிகாரிகள், வரிசையாய் அணி வகுத்து நிற்கும் கார்கள், பட்டுப் புடவை அணிந்திருந்த பெண்கள், என்று அந்த இடம் மணக்கோலம் பூண்டிருந்தது. மேடை, மைக், எல்லாம் ரெடி. இதோ, இன்னும் சிறிது நேரத்தில் இந்தியன் வங்கியின் சேர்மன் கோபாலகிருஷ்ணன் வந்து கிளையைத் திறந்து வைக்க இருக்கிறார்.

ஆசிரியர் எஸ்.ஏ.பி.யின் வீட்டு போன் ஒலித்தது. அவரே அதை எடுத்தார்.

மறுமுனையில் திரு.பி.வி.பார்த்தசாரதி பேசினார். "எஸ்.ஏ.பி., இந்தியன் பாங்க் திறப்பு விழாவிற்கு வரல்லியோ?" என்றார். பதிப்பாளர் பார்த்தசாரதி, ஆசிரியர் அண்ணாமலையை எப்போதும் எஸ்.ஏ.பி. என்றுதான் அன்பாகக் கூப்பிடுவது வழக்கம். கல்லூரி நாட்களில் ஆரம்பித்து நாற்பது ஆண்டு காலமாக அதுதான் வழக்கம்.

எஸ்.ஏ.பி. தயங்கினார். "இல்லை, பார்த்தசாரதி எனக்கும் சேர்த்து நீயே போயிட்டு வந்துடு. எனக்கு கொஞ்சம் எழுத வேண்டிய வேலை இருக்கு. சாயங்காலம் வரை வேலை இருக்கும் போலிருக்கு."

இந்த பதிலைக் கேட்டு பார்த்தசாரதி ஆச்சரியம் அடையவில்லை. அவரைப் போல் எஸ்.ஏ.பியை நன்கறிந்தவர் வேறு யார்? விழாக்களில் கலந்து கொள்வதில் எஸ்.ஏ.பிக்கு விருப்பமே கிடையாது என்று அவருக்கு நன்கு தெரியும். எத்தனையோ விழாக்கள். அரசியல்,

பொது நிகழ்ச்சிகள். எதையாவது சொல்லி எஸ்.ஏ.பி. தவிர்த்துவிடுவார். பொது நிகழ்ச்சிகளில் மேடையேறிப் பேசமாட்டார். இதற்கு அவரது இயல்பான கூச்சம், அடக்கம், சுயக்கட்டுப்பாடு ஆகியவை காரணம்.

பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, குமுதம் ஆசிரியர் பொறுப்பிற்குத் தேவைப்படும் நடுநிலைமையைப் பாதித்துவிடக்கூடும் என்று அவர் கருதினார். எதனாலும் யாராலும், தனது பணி பாதிக்கப்படக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். தமிழ்நாட்டில் வாழும் எளிய மக்களுக்குப் பத்திரிகை நடத்துபவர், அந்த மக்களைப் போல வாழவேண்டும் என்று எண்ணினார். பணமோ, அதிகாரமோ, செல்வாக்கோ அவரைச் சிறிதும் பாதித்ததில்லை.

இன்னொரு காரணமும் உண்டு. தனது முகத்தை விளம்பரப்படுத்திக் கொள்ளாதிருப்பதில்தான் அவருக்கு மகிழ்ச்சி. ஓர் எழுத்தாளர், அரசியல் விமர்சகர் என்ற முறையில் மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார். அதைத் தெரிந்து கொள்வதற்காக பஸ் ஸ்டாண்ட், பெட்டிக்கடை, டீக் கடைகள், ரயில்வே ஸ்டேஷன்கள், துணிக் கடைகள் இங்கெல்லாம் போய் அரசியல், சினிமா, பத்திரிகைகள், பொது விஷயங்கள் பற்றியெல்லாம், மக்கள் என்னவெல்லாம் பேசுகிறார்கள் என்பதைக் கவனமாகக் கேட்பார்.

தனது முகம் பிரபலமாகிவிட்டால், இதற்கு இடைஞ்சலாக இருக்கும் என்று அவர் எண்ணினார். அவர் வாழ்நாள் முழுவதும், அவரது படமோ, பேட்டியோ குமுதத்தில் மட்டுமல்ல, தமிழகத்தின் எந்தப் பத்திரிகையிலும் வெளிவந்ததில்லை. அவரை யாராவது பேட்டி காண வேண்டுமென்று கேட்டால், "என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால், என் பத்திரிகையைப் படியுங்கள். அதுபோதும்" என்பார்.

"எஸ்.ஏ.பி. இந்த விழாவிற்கு நீ வரவேண்டும்." பார்த்தசாரதி தொடர்ந்து வற்புறுத்தினார். "நீ வரவில்லையென்றால், சேர்மன் கோபாலகிருஷ்ணன் வருத்தப்படுவார். இந்த ஃபங்ஷன் எவ்வளவு முக்கியமானதுன்னு உனக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. நான் உன் வீட்டிற்கு வரேன். அங்கிருந்து இரண்டு பேரும் சேர்ந்தே போயிட்டு வந்திடலாம்."

"அவர் வருத்தப்படுவதற்கு நான் காரணமாக இருக்க விரும்பவில்லை. நீ முதல்ல விழாவிற்குப் போயிடு. நான் வந்து சேர்ந்து கொள்கிறேன்"என்றார் எஸ்.ஏ.பி. இந்த விழா முக்கியமானது என்று அவருக்கு நன்றாகத் தெரியும். புதிதாகக் கிளை திறக்கப்பட இருக்கும் பங்களா அவருக்குச் சொந்தமானது. அது 1924ம் வருடம் எஸ்.ஏ.பி.யின் தந்தை வசம் வந்தது. அப்போதிருந்து அவரது குடும்பம் அங்குதான் வசித்து வந்தது. அந்த வீடு ரொம்பப் பெரிதாகவும், ஆடம்பரமாகவும் இருக்கிறது என்று எண்ணிய எஸ்.ஏ.பி. பக்கத்திலேயே ஒரு சிறிய வீட்டிற்குக் குடிபெயர்ந்தார்.

ஆனால் பாங்க் நடத்துவதற்கு ஏற்ற வீடு அது. நகரின் முக்கியமான சந்திப்பின் அருகே அது அமைந்திருந்தது. பெரிய பெரிய அறைகள். தோட்டத்தில் நிழல்

தரும் பெரிய மரங்கள். வாடிக்கையாளர்கள் சௌகரியமாக வந்து போக ஏற்ற இடம்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு, "கோதை" என்று தன் மனைவியை அழைத்தார் எஸ்.ஏ.பி. "நான் பாங்க் திறப்பு விழாவிற்குப் போய்த் தலையை காண்பித்துவிட்டு வந்து விடுகிறேன். எழுதவேண்டிய வேலை கிடக்கிறது.இந்த வாரத் தலையங்கம் இன்னும் எழுதவில்லை" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

வழக்கம் போல வெள்ளை அரைக் கை கதர் சட்டை, கதர் வேஷ்டி அணிந்து புறப்பட்டார். விழாப்பந்தல், களை கட்டியிருந்தது. எல்லோரும் அவரவர் வேலையில் பிஸியாக இருந்தார்கள்.

அவர் நுழைவதை யாரும் கவனிக்கவில்லை. தான் எண்ணியபடியே நடப்பது கண்டு அவருக்கு மகிழ்ச்சி. யார் கண்ணிலும் படாமல் சென்று, பின்னாலிருந்து இரண்டாவது வரிசையில் சற்று நேரம் அமர்ந்திருந்துவிட்டு, ஓசைப்படாமல் நழுவி வந்துவிட வேண்டும் என்பது அவர் எண்ணம். அவர் கலந்து கொண்ட மாதிரியும் ஆச்சு. அவர் விழாவிற்கு வரவில்லையென்று யாரும் குறை சொல்லவும் முடியாது.

விழா ஆரம்பிக்கப் போகும் நேரம். மேடையில் இருந்த சேர்மன் கோபால கிருஷ்ணன் இவரைப் பார்த்துவிட்டார். பார்த்தது மட்டுமல்ல, மேடையிலிருந்து இறங்கி அவருக்கே உரிய பெரிய புன்னகையுடன், இவரை நோக்கி வரவும் செய்து விட்டார்.

"என்ன ஸார், பின்னாலே, தனியா உட்கார்ந்திருக்கீங்க. என் கூட முன் னால வாங்க. வேண்டாம்னு மறுத்துடாதீங்க, ப்ளீஸ்" என்று அழைத்தார். அத்தோடு மட்டுமல்ல. "எஸ்.ஏ.பி. அவர்கள் குத்துவிளக்கேற்றி கிளையைத் துவங்கி வைப்பார்கள்" என்று அறிவித்தும் விட்டார். எஸ்.ஏ.பி மறுத்துப் பார்த்தார்.

ஆனால், அவருக்கு சேர்மன் கோபாலகிருஷ்ணன் மீது மதிப்பும், மரியாதையும் உண்டு. ஆதலால் அவரது பேச்சைத் தட்ட முடியவில்லை.

எஸ்.ஏ.பி.யை கௌரவிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை கோபாலகிருஷ்ணன் நன்றாகவே பயன் படுத்திக் கொண்டார். குத்துவிளக்கேற்றி முடித்ததும், அவருக்கு மாலை அணிவிக்கவும், அதைப் படம் எடுக்கவும் ஏற்பாடு செய்தார்.

"நீங்க விழாவிற்கு வந்து கலந்து கொண்டதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி சார். நன்றி" என்றார் கோபாலகிருஷ்ணன்.

"எனக்கும் சந்தோஷம்தான்." என்றார் எஸ்.ஏ.பி.. அவரும் பார்த்தசாரதி யும் ஒருவரை ஒருவர் அர்த்த புஷ்டியோடு பார்த்துக் கொண்டார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு, எஸ்.ஏ.பியின் இல்லத்திற்கு ஒருவர் வந்தார். "என் பெயர் ராமசாமி. நான் இந்தியன் வங்கி புரசைவாக்கம் கிளையின் மானேஜர்.

சேர்மன் இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்" என்று ஒரு பொட்டலத்தை நீட்டினார். பிரித்து பார்த்தார் எஸ்.ஏ.பி. இரண்டடிக்கு மூன்றடி சைசில், அழ காக ஃபிரேம் பண்ணப்பட்ட ஒரு படம். படத்தில் எஸ்.ஏ.பிக்கு மாலை அணி வித்துக் கொண்டிருந்தார் சேர்மன் கோபாலகிருஷ்ணன்.

"படம் ரொம்ப அழகாயிருக்கு" என்று திருமதி.எஸ்.ஏ.பி மகிழ்ந்து போனார். "இந்தப் படத்திலே நீங்கே ரொம்ப நல்லாயிருக்கீங்க. இந்தப் படம் எனக்கு மிகவும் பிடிச்சிருக்கு" என்று சொல்லிக் கொண்டே, அவர் படத்தை எங்கே மாட்டலாம் என்று கண்களை அலையவிட்டார். "இதை மாட்டுவதற்கு இப்போதே ஏற்பாடு செய்கிறேன்" என்று வீட்டு வேலைக்காரனை அழைத்தார்.

"கோதை, ஒரு நிமிஷம்." என்று அழைத்தார் எஸ்.ஏ.பி.

"அவசரப்படாதே. கொஞ்சம் நாள் கழித்து யோசித்துப் பார்த்துவிட்டு மாட்டலாம்" என்றார். அவரது மனைவியால், அவர் பேச்சைத் தட்ட முடியவில்லை.

கொஞ்ச நாட்கள் கழிந்தன. அந்தப் படத்தைப் பற்றிய ஞாபகம் வந்து அதைத் தேடிப் பார்த்தால் அந்தப் படத்தைக் காணோம்!

வீடு முழுக்கத் தேடிப் பார்த்தாயிற்று. படம் கிடைக்கவே இல்லை. என்ன ஆயிற்று என்று எஸ்.ஏ.பியிடமிருந்து பதிலும் கிடைக்கவில்லை. அவர்தான் அந்தப் படத்தை ஒளித்து வைத்திருக்க வேண்டும். அது எங்கே என்பது அவருக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். ■

ஏழு

எனக்கும் ஒரு நண்பர்

அதுதான் எஸ்.ஏ.பிக்குக் கல்லூரியில் முதல் நாள். பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, லயோலாக் கல்லூரியில் இண்டர் வகுப்பில் சேர்ந்தார். எப்போதும் போல், அரை மணிநேரம் முன்னதாகவே வந்துவிட்டார். மனதில் ஒரு உற்சாகம். கூடவே கொஞ்சம் படபடப்பு. கல்லூரியின் மூன்றாவது மாடியில் அமைந்திருந்த வகுப்பறையை நோட்டம் விட்டார். அந்தப் பெரிய வகுப்பறை காலியாக இருந்தது. இன்னும் யாரும் வரவில்லை. எஸ்.ஏ.பி. முதல் வரிசையில், விரிவுரையாளர் மேஜைக்கு நேரெதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபோது, நுழைவாசலிலிருந்து வரிசையாக அணி வகுத்திருந்த அசோக மரங்கள் தெரிந்தன. அழகான தோட்டம். அதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, படபடப்புக் குறைந்து மனம் சற்று அமைதியடைந்தது.

அப்போது வகுப்பறைக்குள் இன்னொரு மாணவர் நுழைந்தார். பதினாறு வயதிருக்கும். விறுவிறுவென உள்ளே நுழைந்தவர் வரிசை வரிசையாகக் காலியாக இருந்த பெஞ்சுகளைப் பார்த்தார். பின் நேரே எஸ்.ஏ.பி. அமர்ந்திருந்த நாற்காலிக்கு அடுத்த நாற்காலியில் வந்து அமர்ந்து கொண்டார். புதிதாக வந்தவரைத் திரும்பிப் பார்த்தார் எஸ்.ஏ.பி.

"நான் மயிலாப்பூர் பி.எஸ். ஹைஸ்கூலில் படித்தேன். நீங்க?" என்றார் புதிதாக வந்தவர்.

"நான் சாந்தோம் ஹைஸ்கூலில்." என்று சொன்ன எஸ்.ஏ.பி "என் பெயர் அண்ணாமலை" என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"நான் பார்த்தசாரதி" என்றார் புதிதாக வந்தவர்.

"இரண்டு பேர் ஸ்கூலும் பக்கத்தில, பக்கத்திலதான்" என்று சொல்லி முறுவலித்தார்.

அவரையே வைத்தகண் வாங்காமல் பார்த்தார் எஸ்.ஏ.பி. பார்த்தசாரதி சிரிக்கும்போது முகமே சிரிக்கும்.கண்களில் ஒருவித பிரகாசமும், மகிழ்ச்சியும் ததும்பும், அழகான, சந்தோஷம் குடி கொண்ட முகம். எஸ்.ஏ.பிக்கு அவரை மிகவும் பிடித்துப் போயிற்று. அன்று - அதாவது ஜூன் 28, 1940 - தன் வாழ்க்கையில், 54 வருடங்கள், இணைபிரியாமல், உயிருக்குயிராக இருக்கப்போகும், நண்பரை சந்திக்கிறோம் என்பது எஸ்.ஏ.பிக்குத் தெரியாது.

அன்றிலிருந்து, அவர்கள் எல்லா வகுப்புகளிலும், அருகருகே அமர்ந்திருந்தார்கள். மதியம் சேர்ந்தே சாப்

பிட்டார்கள். கல்லூரியில் ஒன்றாகவே உலாவினார்கள்.

"எஸ்.ஏ.பி. எனக்கு ஒரு பேனா வாங்கணும். நீ வந்து பார்த்து செலக்ட் பண்ணித் தரியா?"

"ஓ,எஸ்! டவுனுக்குப் போய் வாங்கலாம்? அங்க நல்ல பேனா கிடைக்கும்."

"ம். ஆனால் டவுன் எங்கிருக்கு? எனக்குத் தெரியாதே!"

எஸ்.ஏ.பி. ஆச்சரியத்தோடு பார்த்தசாரதியை ஏறிட்டுப் பார்த்தார்.

"என்னது டவுன் எங்கேயிருக்குனு தெரியாதா?"

"ஆமாம் தெரியாது. நான் இதுவரை அங்கே போனதேயில்லை."

"அப்படியானால், நாளைக்கு, காலேஜ் முடிந்ததும், இரண்டு பேரும் போவோம். நம்ம 'உல்ஸ்லி' யை எடுத்துட்டுப் போவோம்."

மறுநாள் வகுப்புகள் முடிந்ததும் இருவரும் கிளம்பினார்கள். எஸ்.ஏ.பி. தேர்ந்தெடுத்துக் கொடுத்த அந்தப் பேனாவை பார்த்தசாரதி வெகுகாலத்திற்குப் பொக்கிஷம் போல வைத்திருந்தார்.

நாளாக, நாளாக அவர்களது நட்பு பலமாக வளர்ந்து கொண்டிருந்தது. அவர்களில் ஒருவர் ஓரிடத்தில் இருக்கிறார் என்றால், மற்றொருவர் அங்கேதான் இருக்கிறார் என்று சொல்ல வேண்டியதே இல்லை என்னும் அளவிற்கு அவர்கள் கல்லூரியில் ஒன்றாகவே காணப்பட்டார்கள். கல்லூரியில் மட்டுமல்ல மாலை வேளைகளில் பார்த்தசாரதி எஸ்.ஏ.பி.யின் புரசைவாக்கம் பங்களாவிற்கு வந்து விடுவார். தினமும் மைலாப்பூரிலிருந்து புரசைவாக்கம்வரை தனது சைக்கிளில் வந்து செல்வார்.

மேலோட்டமாகப் பார்த்தால் அவர்கள் இருவரது இயல்புகளும் ஒன்றுக்கொன்று முரணானவை போல் தோன்றும். எஸ்.ஏ.பி. எப்போதும் அமைதியானவர். கூச்ச சுபாவம் கொண்டவர். அதிகம் பேசாதவர். உள்முகமாக சிந்திப்பவர். பார்த்தசாரதி எதையும் வெளிப்படையாகப் பேசுபவர். தைரியமும் துணிச்சலும் மிகுந்தவர். தன்னம்பிக்கை கொண்டவர். அவரிடம் எப்போதும் உற்சாகம் பொங்கி வழியும். ஆனால் இந்த இருவேறு இயல்புகள்தான் அவர்களை நெருக்கமான நண்பர்களாக ஆக்கின.

ஒரு சமயம் புரசைவாக்கம் வீட்டிற்கு எஸ்.ஏ.பி.யின் உறவினர் ஒருவர் வந்திருந்தார். எஸ்.ஏ.பி.யின் தாய், லட்சுமி ஆச்சி. எதையோ தேடிக் கொண்டிருந்தார். "ஆத்தா என்ன தேடிக்கிட்டிருக்கீங்க?" என்று கேட்டார் எஸ்.ஏ.பி.

"ஒண்ணுமில்லை. மத்தியானம் ஆனந்தவிகடன் படிச்சுக்கிட்டு இருந்தேன். எங்கே வைச்சேன்னு தெரியலை. நீ எங்கேயும் கண்டையா? உன் ரூமுக்கு எங்கேயும் எடுத்துட்டுப் போனியா?"

"இல்லையே. நான் பார்க்கலியே. இங்கேதான் எங்கேயாவது கை மறவா வெச்சிருப்பீங்க. அப்புறம் தேடிக்கலாம்."

"சாயங்காலம் பார்த்தசாரதி படிச்சுக்கிட்டிருந்ததைப் பார்த்தேனே. அவன்தான் வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போயிருக்கணும். யார்கிட்டயும்



தூய்மையும், துணிவும்

சொல்லறதுமில்ல, கேக்கறதுமில்ல, நினைச்சுக்கிட்ட போது இங் கிருந்து பொருட்களை எடுத்துக் கிட்டுப் போயிட்டு இருக்கான். நீ தேடற புத்தகம் அவன் வீட்லதான் இருக்கும்" என்று சொன்னார் வீட்டுக்கு வந்திருந்த உறவினர்.

அவ்வளவுதான். விருட் டென்று நாற்காலியிலிருந்து எழுந்தார் எஸ்.ஏ.பி. விடுவிடு வென்று அந்த உறவினரை நோக்கிப் போனார். அவர் முகம் சிவந்திருந்தது. உள்ளே பொங்கி வந்த கோபத்தை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

"என்ன சொன்னீங்க? என்னைப் பத்தி என்ன வேணா சொல்லுங்க. என் ஃபிரண்டைப் பற்றி எதுவும் பேச வேண்டாம். நீங்க நினைக்கிற மாதிரி ஆளு இல்ல அவரு. புரியுதா?" என்று பொரிந்து தள்ளினார்.

எஸ்.ஏ.பி.யின் உறவினர் திகைத்துப் போனார். அவர் எஸ்.ஏ.பியை இவ்வளவு கோபமாகப் பார்த்ததே இல்லை. தப்பாய்ப் பேசிவிட்டோம் என்பது புரிந்தது.

"இல்லை தம்பி... வந்து... நான் அப்படிச் சொல்லலை. தப்பா நினைச் சுக்காதே... சின்ன விஷயத்திற்கு இப்படிக் கோபப்படறியே..." என்று மென்று முழுங்கினார் அந்த உறவினர்.

எஸ்.ஏ.பியின் தாய்க்கும் அவரது கோபம் புதிதாக இருந்தது. அவரை அருகில் அழைத்துச் சாந்தப் படுத்தினார். அதன்பின் எஸ்.ஏ.பியின் முன்னிலையில் பார்த்தசாரதியை யாரும் குற்றம் சாட்டிப் பேசியதில்லை.

1945ம் வருடம், எஸ்.ஏ.பியும், பார்த்தசாரதியும், முதல் வகுப்பில் எம்.ஏ.தேறினார்கள். ஐந்து வருடம் இணைபிரியாத நண்பர்களாகப் பழகிய அவர்களது நட்பிற்கு ஒரு சோதனை வந்தது.

எஸ்.ஏ.பி. சட்டம் படித்து பாரிஸ்டராக வேண்டுமென்று விரும்பினார். பார்த்தசாரதி அக்கவுண்டிங் படித்து ஆடிட்டராக வேண்டும் என நினைத்தார். எஸ்.ஏ.பிக்கு பார்த்தசாரதியைப் பிரிய மனமில்லை. என்ன செய்வதென்று புரியவில்லை. பார்த்தசாரதியின் தந்தையைச் சந்தித்து யோசனை கேட்க முடிவு செய்தார்.

பார்த்தசாரதியின் தந்தி புலியூர் வரதராஜன். கண்டிப்பாகவர். ஆனால் அன்பானவர். அவர்மீது எஸ்.ஏ.பிக்கு மிகுந்த அன்பு மரியாதை. எஸ்.ஏ.பி. அவரது வீட்டிற்குப் போனார்.

"பார்த்தசாரதி ஆடிட்டருக்குப் படிக்க வேண்டும் என்ற நினைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் என்கூடச் சேர்ந்து சட்டம் படிக்க வேண்டுமென்று

விரும்புகிறேன். நீங்கதான் சட்டம் படிக்க அவருக்கு எடுத்துச் சொல்லி எப்படியாவது மனதை மாற்றணும்." என்று அவரிடம் கேட்டுக் கொண்டார் எஸ்.ஏ.பி.

"நான் என்ன பண்ணமுடியும் அண்ணாமலை? அவன் ஆடிட்டராக ஆகியே தீர்வது என்று பிடிவாதமாக இருக்கான். நீ அவன்மேல இவ்வளவு பிரியம் வைச்சிருக்கிற. நீ இவ்வளவு சொல்றதாலே நான் அவன்கிட்ட பேசிப் பார்க்கிறேன். ஆனா அவன் மனசை மாத்தமுடியும்னு எனக்கு நம்பிக்கை இல்லே." என்றார் அவர்.

சில வாரங்கள் சென்றன. பார்த்தசாரதி தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. எஸ்.ஏ.பி.யும் தன் முடிவை மாற்றிக் கொள்ளத் தயாரில்லை. அவர் பார்த்தசாரதியின் மனதை மாற்றத் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருந்தார்.

ஒரு மாதம் ஆயிற்று. எஸ்.ஏ.பி. புலியூர் வரதராஜன் வீட்டிற்குப் போனார். அப்போது பார்த்தசாரதி வீட்டில் இல்லை.

"மாமா, நான் செய்திருக்கிற காரியத்திற்கு நீங்க என்ன மன்னிச்சிடணும்." என்றார் எஸ்.ஏ.பி.

"என்னப்பா. என்ன பண்ணியிருக்கே சொல்லு." என்றார் பெரியவர்.

"எனக்கும், பார்த்தசாரதிக்கும், லா காலேஜிலே, ரிஜிஸ்டர் பண்ணி, ஃபீசும் கட்டிட்டேன். பார்த்தசாரதி என்கூடத்தான் படிச்சாகணும். வேறவழி இல்லை."

வரதராஜனால் தன் காதுகளை நம்ப முடியவில்லை.

"இது பார்த்தசாரதிக்குத் தெரியுமோ?"

"தெரியாது. நான் இன்னும் சொல்லலை. உங்ககிட்டதான் முதன்முதலாச் சொல்றேன்."

வரதராஜனால் அதிர்ச்சியிலிருந்து மீளமுடியவில்லை. இப்படி ஒரு நட்பா?

"பார்த்தசாரதி, பாரு உன்மேல எவ்வளவு ப்ரியமும், மரியாதையும் வைச்சுருக்கான்னு. ரெண்டு பேரும் சேர்ந்தே படிக்கணும்ங்கிறதுக்காக, உன் பேரையும் கொடுத்து ஃபீசையும் கட்டிட்டு வந்திட்டான். அவன் விருப்பப்படி, சேர்ந்தே படி, அதுதான் என் விருப்பமும்." என்றார் அவர்.

1947ல் இருவரும் சட்டக் கல்லூரியிலிருந்து வக்கீல்களாக வெளிவந்தனர். 1947 இறுதியில் குமுதம் துவங்கப்பட்டது. எப்போதாவது மனம் சோர்வுறும்போது எஸ்.ஏ.பி.லயோலாக் கல்லூரியின் சரித்திர வகுப்பறையில் நடந்த அந்த சந்திப்பையும், பார்த்தசாரதியின் புன்னகை தவழும், தன்னம்பிக்கை நிறைந்த முகத்தையும் நினைத்துக் கொள்வார். மனதில் உற்சாகம் பிறக்கும்.

அவர்களது நட்பு, எஸ்.ஏ.பி. அமரராகும் வரை 54வருடங்கள் நீடித்தது.

எட்டு

அன்று எஸ்.ஏ.பி.யின் வீட்டிற்கு மிக முக்கியமான ஒருவர் வருவதாகச் சொல்லியிருந்தார். எஸ்.ஏ.பி.யின் பெருமதிப்பைப் பெற்றவர் அவர். வருகிறவர் எஸ்.ஏ.பியின் மதிப்பை மட்டுமல்ல. நாடு முழுவதும் மிகவும் மதிக்கப்பட்டவர். தமிழ்த்திரை உலகில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி பல வெற்றிப் படங்களைத் தயாரித்தவர்.

"கோதை" எஸ்.ஏ.பி. தன் மனைவியை அழைத்தார்.

"இன்னைக்கு காலைலே நம்ம வீட்டிற்கு ஏ.வி. மெய்யப்ப செட்டியார் வருகிறார். அதனால பசங்களையெல்லாம் கொஞ்சம் சத்தம் போடாமல் விளையாடச் சொல்லு" என்றார்.

மனைவிக்கு மகிழ்ச்சி. ஆச்சர்யம்.

"அப்படியா! குழந்தைகளை நான் பார்த்துக்கிறேன். அவர் எதற்காக வருகிறார்?"

"தெரியவில்லை. வரட்டும் பார்ப்போம்."

தன்னுடைய சமீபத்திய வெளிநாட்டுப் பயணத்தைப் பற்றிப் பேசத் துவங்கினார் ஏ.வி.எம்.

"எஸ்.ஏ.பி., நீங்கள் வெளிநாடு சென்றிருக்கிறீர்களா?"

"நான் இந்தியாவை விட்டு வெளியே போனதில்லை."

"நீங்கள் எந்த நாட்டைப் பார்க்காவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் ஜப்பானை மட்டும் பார்த்து விட வேண்டும். மக்களின் கடின உழைப்பும் கட்டுப்பாடும் எப்படி ஒரு நாட்டை முன்னேற்றுகின்றன என்பதற்கு ஜப்பானைத் தவிர சிறந்த உதாரணம் கிடையாது. சில வருடங்களிலேயே முன்னேற்றத்தில் ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் மிஞ்சிவிட்டது. இதற்கு காரணம் மக்களின் கடின உழைப்பு தான்."

எஸ்.ஏ.பி நேரில் பார்த்ததில்லையென்றாலும், ஜப்பானைப் பற்றி நிறையப் படித்திருந்தார். அதனால் ஏ.வி.எம்மின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டார்.

ஏ.வி.எம். தொடர்ந்து,

"எஸ்.ஏ.பி. நான் இங்க வந்திருப்பது வேறு காரணத்துக்காக. உங்களுடைய 'காதலெனும் தீவினிலே' நாவலைப் படித்தேன். ரொம்ப

எல்லாமே ஆண்டவன் செயல்

அருமையான கதை. எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அந்தக் கதையின் உரிமையை வாங்கி, படமாக்க விரும்புகிறேன். திரைப்படமாக எடுத்தால் வெற்றிகரமாக ஓடும்."

எஸ்.ஏ.பிக்கு இன்ப அதிர்ச்சி. அவரால் நம்ப இயலவில்லை. மனதுக்குள் மகிழ்ச்சி உற்சாகம். எனினும் வழக்கம்போல் எதையும் வெளிக்காட்டாமல், ஏ.வி.எம்முக்கு நன்றிகூறி, யோசித்து ஒரு வாரத்தில் தன்னுடைய முடிவைக் கூறுவதாகச் சொன்னார்.

ஏ.வி.எம். சென்ற பிறகு, எஸ்.ஏ.பி தன் மனைவியிடம்,

"கோதை, என்னுடைய கனவு நனவாகப் போகிறது. என்னுடைய கதை படமாகப் போகிறது. அதுவும் மிகப் பெரிய தயாரிப்பாளர் அதைத் தயாரிக்கப் போகிறார்."

அன்று எஸ்.ஏ.பி. மிக சந்தோஷமாக இருந்தார். உடனே தன்னுடைய நண்பர், பார்த்தசாரதியிடம் தன்னுடைய மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். பப்ளிஷருக்கும் மகிழ்ச்சி.

ஓரிரு நாட்கள் கழிந்தன. வழக்கமான பத்திரிகைப் பணி எஸ்.ஏ.பியை ஆட்கொண்டிருந்தது. அப்படி ஒரு நாள் பத்திரிகை வேலைகளை முடித்து, களைத்து இரவு ஒன்பது மணிக்கு எஸ்.ஏ.பி வீடு திரும்பிய போது டெலிபோன் மணி ஒலித்தது. பேசியது பப்ளிஷர் பார்த்தசாரதி.

"எஸ்.ஏ.பி. நம்ம பெரிய கருப்பனுக்கு உடம்பு சரியில்லை" எஸ்.ஏ.பியின் இதயம் பதறியது.

"ஏன்? என்னாயிற்று?"

"ஜி. எச்ல அட்மிட் பண்ணியிருக்காங்க. பயப்படறதுக்கு ஒண்ணுமில்லை. டாக்டர்ங்கல்லாம் கூட இருக்காங்க." விஷயம் சீரியஸ் என்று எஸ்.ஏ.பிக்கு புரிந்தது.

ராத்திரி பத்துமணி போல எஸ்.ஏ.பியும் பார்த்தசாரதியும் ஜி.எச் போய் சேர்ந்தார்கள். அமைதியும் இருட்டும் பரவியிருந்தது. ஆஸ்பத்திரியின் நீண்ட பாதைகளைக் கடந்து ஐந்தாம் எண் வார்டை அடைந்தார்கள். ஆஸ்பத்திரி மணமும், நண்பருக்கு என்ன ஆகுமோ என்ற கவலையும் சேர்ந்து எஸ்.ஏ.பியை மிகவும் பாதித்தது. வார்டின் கடைசிப் படுக்கையில் பெரியகருப்பன் படுத்திருந்தார். அவரது ஒரு கையில் ரத்தமும் மற்றொரு கையில் சலைனும் ஏறிக் கொண்டிருந்தது. பெரிய கருப்பன் மெல்லக் கண்களைத் திறந்து எஸ்.ஏ.பியையும் பார்த்தசாரதியையும் அடையாளங் கண்டு லேசாய் சிரித்தார்.

"அண்ணே, இப்போ பரவாயில்லையா?" என்றார் எஸ்.ஏ.பி.. பெரியகருப்பன் பதிலளிக்க முயன்றும் வார்த்தைகளில் ஓசை வரவில்லை. 'தம்பி' என்று மட்டும் சொல்லி கண்களை மூடிக்கொண்டார்.

எஸ்.ஏ.பியால் கண்ணீரை அடக்க முடியவில்லை. பெரிய கருப்பன் சொந்த அண்ணன் இல்லையென்றாலும் 'அண்ணே' என்றுதான் அவரை எஸ்.ஏ.பி அழைப்பார். 1944லிருந்து பழக்கம். '47ல் குமுதம் ஆரம்பித்தபோது பெரிய கருப்பன்தான் அதனை அச்சிட்டார். மெஷின்களையும் அதன் நுட்பங்களையும்


பெரியகருப்பன்

பற்றி நன்கு தெரிந்தவர். பெரியகருப்பன் என்ஜினியர் படிப்பு படித்தவர் அல்ல. இருந்தும் சாதாரண காரிலிருந்து பிரிண்டிங் மெஷின் வரை எது பழுதடைந்தாலும் சரி செய்யும் திறமை அவரிடம் இருந்தது. இதற்காக எஸ்.ஏ.பி. அவரை அடிக்கடி பாராட்டுவார். நண்பர், சகோதரர், உடன்வேலை செய்பவர் என்று எஸ்.ஏ.பி அவர் மீது பாசமும் நேசமும் வைத்திருந்தார்.

"அண்ணே, நீங்கள் குணமடைந்து விடுவீர்கள். நான் உங்களுக்காக தினமும் கடவுளிடம் பிரார்த்திக்கப் போகிறேன்" என்று பெரிய கருப்பனின் கையைப் பிடித்தவாறு எஸ்.ஏ.பி. கூறினார். அந்நேரத்தில் டாக்டர்கள் உள்ளே நுழைந்து பார்த்தசாரதியிடம்,

"இவரை எமர்ஜென்சி ஆபரேஷனுக்கு கொண்டு போகிறோம். வயிற்றில் ரத்தம் கசிவது இன்னும் நிற்கவில்லை. வேறு வழியில்லை, ஆபரேஷன் செய்துதான் ஆக வேண்டும்" என்றார்கள்.

மறுநாள், ஆபரேஷன் செய்தாயிற்று. எனினும் உடல்நிலையில் பெரிய மாற்றம் இல்லை.

சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் "கோதை, இங்கே வா, நான் உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும் என்று தன் மனைவியை அழைத்து, "பெரிய அண்ணனைப் பாற்றி எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது. நான் தினமும் அவருக்காகக் கடவுளிடம் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். பெரிய அண்ணனுக்கு குணமாகட்டும். நான் என் வாழ்க்கையில் மிகவும் ஆசைப்பட்ட ஒன்றை தந்துவிடுகிறேன் என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். நான் ரொம்ப ஆசைப்பட்டது எது என்று தெரியுமா உனக்கு?" என்று எஸ்.ஏ.பி. கேட்டார்.

மனைவி லேசான குழப்பத்துடன் "என்னது?" என்றார்.

"போன வாரம் ஏ.வி.எம். வந்துவிட்டு போனதிலிருந்து நான் மிகவும் ஆசைப்பட்டது என்னுடைய கதை 'காதலெனும் தீவினிலே' படமாவதைதான். இதுதான் என்னுடைய மிகப்பெரிய விருப்பம்."

எஸ்.ஏ.பி. என்ன சொல்ல வருகிறார் என்பதைப் புரிந்த கொண்ட அவரது மனைவி அதிர்ச்சியுடன் கேட்டார்: "என்ன சொல்றீங்க?"

"ஆமாம். நான் கடவுளிடம் வாக்குக் கொடுத்து விட்டேன்."

அவர் அடுத்து என்ன செய்யப் போகிறார் என்று மனைவிக்குக் கவலை.

"ஏ.வி.எம்மிடம் இன்னும் எதுவும் சொல்லவில்லைதானே?"

தான் கூறிப்போகும் விஷயம் மனைவிக்குப் பெரிய ஏமாற்றத்தை அளிக்கும் என்று புரிந்து கொண்ட எஸ்.ஏ.பி. சற்றுத் தயங்கினார்.

"கடவுளிடம் பிரார்த்தித்தவுடனேயே, ஏ.வி.எம்மிடம் பேசினேன். முதல்ல எப்படி சொல்றதுன்னு தெரியலை. ஆனா அப்புறம் சொல்லிட்டேன்."

"என்ன சொன்னீங்க?"

"சென்டிமென்டலான காரணங்களுக்காக என் கதையைப் படமாக்குவதில் எனக்குப் விருப்பம் இல்லைன்னு சொல்லிட்டேன்."

எஸ்.ஏ.பியின் மனைவிக்கு ஏமாற்றம். இந்த விஷயத்தில் எஸ்.ஏ.பி. எவ்வளவு ஆர்வமுடன் இருந்தார் என்பது அவருக்குத் தெரியும்.

"அதற்குள்ள அவசரப்பட்டு ஏவி.எம்கிட்ட சொல்லிட்டீங்களே? பெரிய அண்ணன் இன்னும் குணமடையவில்லை. இன்னும் ஆஸ்பத்திரியிலதான் இருக்கிறார். என்ன ஆகும்னு கூட நமக்குத் தெரியாதே."

எஸ்.ஏ.பி. சிறிது நேரம் மௌனமாயிருந்து, மெதுவாக, ஆனால் அழுத்த மாக.

"கோதை, கடவுள்கிட்ட வேண்டிக் கொள்ளும்போது, அவரிடம் வியாபாரம் மாதிரி பேசக் கூடாது. 'நீ எனக்கு இதைச் செய். நான் உனக்கு பதிலுக்கு அதைச் செய்கிறேன்'னு சொல்லக் கூடாது. அவருக்காக நமக்கு மிகவும் பிரியமான ஒன்றைக் கொடுத்து விட்டு அவர் நமக்கு உதவுவார் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்க வேண்டும். நமக்கு அது நல்லது என்றால் கடவுள் அதை நமக்குத் தருவார். தரவில்லையென்றாலும் பரவாயில்லை, நமக்கு எது தேவையென்று கடவுளுக்குதான் நன்கு தெரியும். எது நடந்தாலும் அது கடவுளின் விருப்பம் என்று திருப்தியுடன் இருக்க வேண்டும்" என்றார்.

பெரிய கருப்பன் சிலநாட்களில் குணமடைந்தார். அதன்பிறகு பல ஆண்டுகள் அவர்களுடைய நட்பு தொடர்ந்தது. ஆனால் காதலெனும் தீவினிலே மட்டும் சினிமாவாக எடுக்கப்படவில்லை.

எஸ்.ஏ.பி. இந்தச் சம்பவங்களைப் பற்றி அதிகம் பேசியதில்லை. எப்போதும் போல அடக்கமாகவே இருந்தார். 'ஏவி.எம். மிகப் பெரிய மனிதர். நான் கூறிய 'சென்டிமென்டல்' காரணத்தை எந்தவிதக் கேள்வியுமின்றி ஏற்றுக் கொண் டார்' என்று மட்டும் சொல்வார்.

எஸ்.ஏ.பிக்கோ, அவரது குடும்பத்தாருக்கோ, உறவினருக்கோ, நண்பர் களுக்கோ, நன்மையோ தீமையோ எது நிகழ்ந்தாலும் எஸ்.ஏ.பி. 'எல்லாம் ஆண்டவன் செயல்' என்பார். இப்படிச் சொல்கிறவர்கள் பலருண்டு, ஆனால் எஸ்.ஏ.பி முழுமையாக நம்பினார். ■

ஒன்பது

எனக்கென்று ஒரு கடமை!

பல சமயங்களில் எனக்கு ஆச்சர்யமாக இருக்கும். மிகப் பெரும் செல்வக் குடும்பத்திலிருந்து வந்த, அப்போதுதான் பள்ளிப் படிப்பை முடித்திருக்கும் சிறுவன், தன் மீதி வாழ்நாள் முழுவதும் கதர் உடையையே அணியப் போவதாக முடிவெடுத்தது ஏன்? 'இனி முதல் வகுப்பில் பிரயாணம் செய்யமாட்டேன்' என்று பதினாறு வயதில் தீர்மானம் செய்தது ஏன்? கடமையைச் சரியாகச் செய்வதும் எளிமையான வாழ்க்கை வாழ்வதும் தான் வாழ்க்கையின் முக்கிய அடிப்படைத் தேவைகள் என்று எண்ணியது ஏன்? என்ன காரணம்?

1959 மைலாப்பூரிலிருந்து புலியூர் வரதராஜன் எஸ்.ஏ.பிக்கு டெலிபோன் செய்தார். "அண்ணாமலை, இளம் சன்யாசி ஒருவர் வந்திருக்கிறார். அவர் இன்று பகவத் கீதை பற்றிப் பேசுகிறார். கீதையின் முதல் அத்தியாயத்தை அவர் விவரிக்கும் முறை இருக்கிறதே, அது அற்புதம்! உனக்கு அது பிடிக்கும் என்ற நினைக்கிறேன். நாளைக்கு நீயும் வாயேன்" என்றார்.

எஸ்.ஏ.பி. கொஞ்சம் கொஞ்சம் பகவத் கீதையை வாசித்திருந்தாலும் முழுமையாகப் படித்ததில்லை. அதை முழுமையாகத் தெரிந்து கொள்ள அவருக்கு ஆர்வம். கீதையைக் கற்றுக் கொள்ள மட்டுமல்ல, அதை வாழக்கையில் நடைமுறைப் படுத்துவதிலும்.

மறுநாள் பகவத்கீதை சொற்பொழிவுக்கு ஆருயிர் நண்பர் பார்த்தசாரதியுடன் சென்றார் எஸ்.ஏ.பி. சொற்பொழிவாற்றியவர்: சுவாமி சின்மயானந்தா. அவருடைய சொற்பொழிவு கேட்க மிக ஆனந்தமாக இருந்தது. அடுத்த முப்பது நாளும் இருவரும் தவறாமல் சொற்பொழிவு கேட்கச் சென்றார்கள்.

சுவாமி சின்மயானந்தா நல்ல உயரம். மெலிந்த தேகம். கரும்தாடி. பிரகாசமான, ஊடுருவும் கண்கள். ரிஷிகேசத்தில் பல வருடங்கள் தங்கியிருந்து இந்துமதத் தத்துவங் களைக் கற்றுணர்ந்தவர். கற்றதையெல்லாம் இந்திய மக்கள் அனைவருக்கும் எடுத்துச் சொல்ல ஆர்வம் கொண்டிருந்தார். அவருடைய சொற்பொழிவில் இருந்த மெலிதான நகைச்சுவையும் எளிமையும் கீதையை அருமையாக விளக்கியதோடு மட்டுமின்றி மக்களின் அன்றாட வாழ்வின் சிக்கல்களையும் பலவீனங்களையும் தீர்வுகளையும் எடுத்துச் சொல்லியது.

அந்த கீத யக்ஞம் முப்பது நாட்கள் நடந்து முடிவுற்றது. நான்கு மாதங்கள் கழித்து இன்னொரு யக்ஞம் நடத்துவதைப் பற்றி விவாதிக்கும் கூட்டமொன்று ஒரு காலைப்

பொழுதில் நடைபெற்றது. அதில் கலந்துகொள்ள வந்திருந்தவர்களோடு எஸ்.ஏ.பியும் பார்த்தசாரதியும் ஒரு மூலையில் அமர்ந்திருந்தனர். அவர்கள் இருவரையும் நோக்கி "அடுத்த கீதை யக்ஞத்தை நீங்கள் இருவரும் நடத்த வேண்டும் என நான் விரும்புகிறேன்" என்றார் சுவாமி சின்மயானந்தா.

இருவருக்கும் தங்கள் காதுகளை நம்ப முடியவில்லை. பதில் சொல்வதற்குள் கூட்டம் முடிந்து விட்டது. இருவரும் பிரமித்துப் போனார்கள்.

முப்பதுகளின் நடுவில் இருந்த இருவருக்கும் அந்தப் பணியின் பிரும்மாண்டம் புரிந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் அமர்ந்து சொற்பொழிவு கேட்கக் கூடிய இடத்தை அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். சுவாமிகளும் அவருடைய ஏராளமான சிஷ்யர்களும் தங்குவதற்குப் பெரிய வீடு ஒன்றும் வேண்டும்.

இம்மாபெரும் பணியை இருவரும் ஏற்றுக்கொண்டார்கள். பொருத்தமாக வேறு வீடு ஏதும் கிடைக்காததால் தன்னுடைய பங்களாவிலேயே சுவாமிகள் தங்க எஸ்.ஏ.பி. ஏற்பாடுகள் செய்தார். பங்களாவின் மாடிப் பகுதியில் தங்கியிருந்த எஸ்.ஏ.பி.யும் அவர் மனைவியும் அந்த இடத்தைக் காலி செய்து விட்டு அப்பகுதி முழுவதையும் சுவாமிகள் தங்குவதற்குக் கொடுத்தார்கள்.

அடுத்த இருபது வருடங்களுக்கு சின்மயானந்தா சுவாமிகளுடன் எஸ்.ஏ.பியின் உறவு நெருக்கமாக வளர்ந்தது. சென்னையில் நடந்த ஒவ்வொரு கீதை யக்ஞத்திலும் எஸ்.ஏ.பி. தவறாமல் கலந்து கொண்டார். பகவத் கீதை மீதான எஸ்.ஏ.பியின் ஈடுபாடு வளர்ந்து கொண்டே வந்தது. கீதையின் ஸ்லோகங்கள் அனைத்தையும் மனப்பாடமாகச் சொல்லுவார். ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வியாழன் மாலையிலும் ஏழு மணி முதல் ஒன்பது மணி வரை அவருடைய வீட்டில் கீதை வகுப்புகள் நடக்கும். பார்த்தசாரதி, ரா.கி. ரங்கராஜன், ஜ.ரா சுந்தரேசன், சௌமிய நாராயணன் போன்ற அலுவலக நண்பர்களும் வேறு பல நண்பர்களும் கலந்து கொள்ளும் அந்த வகுப்புகளில் கீதையின் அத்தியாயங்களை வாய்விட்டுப் பாடிப் படிப்பார்கள். எஸ்.ஏ.பியின் நண்பர்கள் அவரைச் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமை மாலைகளில் தொந்தரவு செய்யவே மாட்டார்கள். கீதை வகுப்பு பற்றி அவர்களுக்குத் தெரியும்.

வைகுண்ட ஏகாதசியின் போது கீதையின் அனைத்து ஸ்லோகங்களையும், பதினெட்டு அத்தியாயங்களையும் வாய்விட்டுப் படிப்பார்கள். மிகுந்த சந்தோஷத்துடனும் பக்தியுடனும், ஆனந்தத்துடனும் இரவு முழுவதும் பாடிக் கொண்டே இருப்பதால் எல்லோருக்கும் அடுத்த சில நாட்கள் தொண்டைக் கட்டிக் கொள்ளும்.

எஸ்.ஏ.பி. அடிக்கடிச் சொல்வது இதுதான். "நாம் எல்லோருமே நம் கடமையைத் தவறாமல் செய்ய வேண்டும். கடமையைச் செய்யும் போது அந்த வேலையின் வெற்றி தோல்விகளைப் பற்றி சிந்திக்கவே கூடாது. என்ன பலன் கிடைக்கும் என்பது கடமையின் நோக்கமாக இருக்கக் கூடாது. கடமையில் பலன் வெற்றியாக இருந்தால் அது ஒரு போனஸ் என்றுதான் நினைக்க வேண்டும். அதற்காக மட்டுமே நாம் நம் கடமையைச் செய்யவில்லை என்பதை உணர்ந்து கொண்டால் போதும். பகவத் கீதை நமக்குச் சொல்லித் தருவது இதைத்தான்."

தன் வாழ்நாள் முழுவதும் விரதங்களைக் கடுமையாகக் கடைபிடித்து வந்தார்

எஸ்.ஏ.பி. ஒவ்வொரு மாதமும் இரண்டு ஏகாதசி, இரண்டு சஷ்டி விரதங்களை அவர் மேற்கொண்டார். வெள்ளிக்கிழமை மாலை சாப்பிட மாட்டார். ஒருமுறை அவருடைய மனைவி கேட்டார்" "இத்தனை கடுமையான விரதங்கள் இருந்து உடம்பை ஏன் வருத்திக் கொள்கிறீர்கள்?"

எஸ்.ஏ.பி. புன்னகையுடன் பதில் சொன்னார். "கோதை, தினமும் மூன்று வேளை உணவு கொடுத்து அதைக் கடுமையாக வேலை வாங்குவதாக என் வயிறு புகார் செய்கிறது. எனக்கு வருத்தமாக இருக்கிறது. அதனால் அதற்கு ஓய்வு கொடுக்கிறேன்."

எஸ்.ஏ.பி. தன் அம்மா லக்ஷ்மி ஆச்சியிடம் மிகுந்த பாசம் கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் குளித்து முடித்து பூஜை செய்தபின் தன் தாயை அழைத்து அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெறுவார். இது தவறாமல் நடைபெறும். தாயார் உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்த கடைசி காலத்தில் அவர் அருகிலேயே மாதக்கணக்கில் இருந்து மிகுந்த வாஞ்சையுடன் கவனித்துக் கொண்டார். ஆனால் குமுதத்தின் ஆசிரியர் பணிக் கடமையிலிருந்து என்றும் தன்னை விடுவித்துக் கொண்டதில்லை.

தன் தாயாரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருந்த சமயத்திலும் அலுவலகப் பணிக்கு வழக்கம்போல் வந்தார். அலுவலகத்திருந்தவர்கள் "உங்கள் தாயாருக்கு உடல் நிலை சரியில்லாதபோதும் பணிக்கு வருகிறீர்களே?" என்று கேட்க, "டாக்டர்கள் அங்கே தங்கள் பணியைக் கவனிக்கிறார்கள். இங்கே நாம் நம் பணியைக் கவனிப்போம்" என்று பதிலளித்துவிட்டு தம் கடமையில் மூழ்கினார்.



1994, ஏப்ரல், 17ம் தேதி எஸ்.ஏ.பி. அமரரானார். அவர் உடலைச் சுற்றிலும் நண்பர்கள் கூடினர். அவருடன் கடந்த முப்பது வருடங்களாக வாரத்திற்கு இரண்டு நாட்கள் பகவத் கீதை படித்தவர்கள் அவர்கள். எஸ்.ஏ.பியின் உடலைச் சுற்றி அமர்ந்தார்கள். எஸ்.ஏ.பிக்கு வாழ்க்கையின் மிகப் பிடித்தமான பணியை அவர்கள் அப்போது செய்தார்கள். பகவத் கீதையின் பதினெட்டு அத்தியாய ஸ்லோகங்களையும் தொடர்ந்து வாய் விட்டுப் படித்தார்கள். தொண்டை உலர்ந்து போகும் வரை.

அப்படிப் படிப்பதுதானே எஸ்.ஏ.பிக்குப் பிடிக்கும்?. ■

முற்றும்





1926 - ஆம் ஆண்டு, செட்டி நாட்டில் “ஆனந்த விலாஸ்” வீட்டில், ஆசிரியர் எஸ்.ஏ.பி. 1½ வயது குழந்தை யாக இருக்கையில் எடுத்த படம். அவ ரைக் கையில் தூக்கிக் கொண்டிருப்பவர் அவரது தந்தையார் எஸ்.ஏ. பழனியப்ப செட்டியார்.